(Tamil)

Part - I

1892 / 1297

2913 — G — P

தேசபக்தர்களின் புகழை தேன்போலினிக்கச்செய்யும்

# காங்கிரஸ் பாட்டு.

## பகவத்சிங், ராஜகுரு சுகதேவர் தூக்குதண்டனை.

முதற் பாகம்




V.R. ஏழுமலைப் பிள்ளை அவர்களால்,

தமது ஸ்ரீ "எம்பிரான்" அச்சுக்கூடத்தில்,

ரிஜிஸ்டர்ட்] 7-12-31 [விலை அணா 2.

NATIONAL ARCHIVES LIBRARY
No 2913
Date 7.3.72
GOVT. OF INDIA

உ

ஸ்ரீ வேலுமயிலும் துணை.

தேசபக்தர்களின் புகழை தேன்போலினிக்கச் செய்யும்

# காங்கிரஸ் பாட்டு.

## முதற் பாகம்

### விநாயகர் காப்பு வெண்பா.

பாரதி தேவியடி பாங்குடனே பணிந்தேற்றும்
தீரராம் தேசியத் திலகங்கள்—வீரமதை
பார்புகழ் பாடலதாய் பாலன்தியாக ராஜன்சொல்ல
கார்ப்பாய் கணபதியே காப்பு.

### பாரததேவி தோத்திரம்

தயவிலாததேன வஞ்சம் என்ற மெட்டு
இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி.

பாரதிகுண தேவி பக்தர்புகழ் சஞ்சீவி—திவ்ய பா

அநுபல்லவி.

தாரணியிலெனக் காவி
தாளைப்போற்றினேன தனையனேற்றினேன்
தயை யுடன் கிருபை புரிவாய் ததி பா

சரணம்

தேவராதியர் யாவரும் பணி
தேசத் தொண்டரை காக்கும் செங்கனி
சீலன் தியாகராஜன் போற்றும்
தியான காரணி தர்ம பூரணி
தட மதி விடர் தவிர்த்தருள் செய் பா

விண்ணோர் போற்றும் வீரத்யாகியாகிய

ஸர்தார் பகத்சிங் ராஜகுரு சுகதேவர்

# இவர்கள் பேரில் சாயுச்ய கீதம்

பாரதமாதா பெற்ற பாலர்களே என்ற மெட்டு.

கண்ணிகள்

காங்கிரஸ்தலைவர்களே காந்தியடியார்களே
காதக எமனவன் சுட்டிச்சென்றான் பாசத்தாலே
கலங்கவும் விதியோ காலக்
கொடுமையின் கதியோ கா

பத்தொன்பது முப்பத்தொன்றில் பக்ஷமுள்ள மார்ச்சுமாதம்
பகர்வேன் இருபத்தி மூன்றும் பரிவுடைய தேதிதனில்
பரதவித் தாரே தூக்கில்
பட்டிறந் தாரே கா

சுகதேவர் ராஜகுரு சுத்தமுள்ள பகத்சிங்கும்
சுருக்குமாட்டி தூக்கிவிட்டு சுட்டுப்பிடி சாம்பலானார்
துடிக்குதே நெஞ்சம் பிரம்மன்
தொகுத்திட்ட வஞ்சம்

வீரத்யாகியான பூமான் விண்ணோர்கள் புகழும் சீமான்
விதிவசத்தால் பகத்சிங்கும் விட்டிட உயிரதனை
விருப்ப முற்றாரோ தனது
விரத மற்றாரோ கா

பாரததேவி துடிக்க பக்தர்கள் கண்ணீர் வடிக்க
பாங்குள்ள மகாத்மா காந்தி பலவிதமாய் நொந்துருக
பரமனின் செயலோ நமது
பாக்கிய இயலோ கா

தாஷ்டீகமுள்ள மேதாவி தங்கி வாழும் சென்னைபுரி
தனையன் தியாகராஜன் கவி தானுலவும் எங்கும் மேவி
தமிழுணர்ந் தோரே பிழை
தனை பொறுப் பீரே கா

## நொண்டிச்சிந்து.

தேசாபிமானிகளே இந்த
தேசிய மக்களெல்லோரும் வருந்துவார்களே
மாசற்ற இவர்களுயிர் பாழும்
மாலி எவ்விதம்கவர்ந் தேகினனே
வெடிகுண்டு குற்றத்தினுல் வெகு
விமரிசையாகவேதான் பிடித்துவந்து
படிமிசைலாகூர் கோர்ட்டில் விசாரணை
பாங்குடனே நடத்தி முடிவினிலே
பகத்சிங் சுகதேவர் ராஜகுரு
பக்ஷமுள்ள மூவரையும் லஜ்ஜையுரவே
சகஜமுடன் பிடித்து தூக்கில்
சாகச்செய்தார் உயிர் போகச்செய்தார்
ஆயிரத்துலாயிரத்தி முப்பத்தோராம்
ஆண்டு மார்ச்சு மாதம் இருபத்து மூன்றில்
நேயமாய் திங்கட்கிழமை காலே
நாட்டமுடனே ஏழேகால் மணியதற்கு
தூக்கிட்டு மூவரையும் அன்று
துன்பமுறவேயுயிர் தணமடித்தார்
போக்கியுயிர் சிலநேரம் தணிந்து
பகத்சிங் சுகதேவர் ராஜகுருவை
தூக்கு மரத்திலிருந்து இரக்கி
துரிதமுடன் எட்டரை மணிக்குயெல்லாம்
நோக்கியே மோட்டார் வண்டியில் ஏற்றி
நொடிக்குள் எடுத்துச்சென்றூர் சுடுவதற்கே
அறுபது மைல் தூரம் ஸட்லிஜ்
என்னும் நதியருகில் எடுத்துச்சென்று
பெருமை யுடனே அவர்க்கு இந்து
புரோகிதராம் சீக்கிய புரோகிதருடன்
பரிவுடன் கிரிகைகளை நடத்தி
பதினொன்றேமுக்கால் மணிக்கு காஷ்டமடுக்கி
சரிவர தீயுமிட்டார் அவர்
திரேகமெல்லாம் வெந்துபிடி சாம்பலானதும்

அதிகாலே நாலுமணிக்கு மூவர்களின்
அஸ்திகளை பொருக்கி நதியில் விட்டார்
பதிபுகழ் இவர்களைப்போல் எந்த ஜென்மத்தில்
பார்ப்போமையா மன தார்ப்போமையா
பொழுதுவிடிந்தவுடன் மூவருயிர்
போக்கியதை கேட்டஜனம் கூக்குரலிட்டே
அழுவார் சிலபேரும் அந்த
அன்னை பாரதியின் செய லென்போரும்
இருபத்திநான்கு வயதில் பகத்சிங்
இறந்து மடிவதற்கு ஈசனெழுத்தோ
பெருமை பெருகும் புண்ணியன் பாழும்
பிரம்மனெழுத்துபடி உயிர்விடுத்தே
தாதாபாய் திலகருக்கும் கோகேல
தகைமையுள்ள மோதிலால் நேருதனக்கும்
தோதாய் தியாகராஜன் மொழிபோல் சென்றார்
சொல்லுதற்கு மேலுலகில் விந்தையிதன்றோ
(தேசாபிமானிகளே)

---

## சுவாமி விவேகாநந்தர் துதி

வனஜாக்ஷி என்ற மெட்டின் சரணம்
பின்னடி வேறு

பல்லவி.

விவேகானந்தா வீரதீரமே மிகுந்த வி

அநுபல்லவி.

விரும்பும் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் மகிழும் வி

சரணங்கள்.

தவயோகிகள் மகிழும் கருமபொற் குடமே
தாய்நாட்டிற்கே யுழைக்க எடுத்தாயிச்சடமே
குவலயந்தனிலுநதன் குணமிகு திடமே
கூறவென்றலாமோ எம்மால் ஆரிவா ருன்பெருமை வி

நினைக்கநினைக்க மனம் களித்திடும் சிங்கம்
நிகழ்த்தினாலு முலகமெங்கிலும் பொங்கும்
தன்னைத்தானே வெறுத்திட்டதகைமை சேர்தங்கம்
தத்துவந் தனையுணர்ந்து எத்திக்கும்செய்தாய்ப்பிரசங்கம் வி

தேசியகக்ஷிக்கொரு திலகம்போல் ஜெனித்தாய்
தேனாமிர்தமொழிகள் தெரிவித்தே இனித்தாய்
மோசம்புரி மும்மல பேய்தனை துணித்தாய்
மேதினியிலாகமங்க ளோதியே தவம்புரிந்தாய் வி

வேகிநாரணரிட மரபினில் உதித்து
வேலன் கலைமகளின் அடிமலர் துதித்து
மோகனரின் பெயரை மனமதில் பதித்து
மைந்தன் தியாக ராஜன்சொன்ன சந்தக்கவியைஇசைத்து வி



M. K, GANDHI

# மகாத்மா காந்திஜீ பேரில் துதி

நம்பிக்கை கொண்டெல்லோரும் என்றமெட்டு
இராகம்-இந்துஸ்தான், தாளம் ஆதி.

பல்லவி

சாதகமாய் புவி மீது அவதரித்த
சாதுமகான் காந்தி
சாதுமகான் காந்தி புகழ் ஓதுவதே சாந்தி வெகு சா

அநுபல்லவி.

மத—பேதகமற்ற சிங்காரன் கதர்
பெருமையை காட்டிய தீரன் அவர்
நீதமுடனே தமிழ் நாடுகளெல்லாம்
நயகுண கெம்பீரன்—வெகு சா

தொகையறு.

வாசமாய் குஜராத்தில் வைசிய வம்சத்தில்
வாய்மையாய் அவதரித்தார்
தேசமக்களுக்காக தெய்வம்போல் உழைத்துமே
சிறைச்சாலையே புகுந்தார்

ஷை அநுபல்லவி எடுப்பு.

நம்—நாடுசெழிக்க ஜெயம் தொடுத்தார் எந்த
நாளும் சுகமதனை விடுத்தார் அவர்
பாடுபட்டே வைராக்கிய முறையதின்
வேதமதை யடுத்தார்—வெகு சா

தொகையறு

ஆவலாய் சுயராஜ்யம் அடைவதற்காயுலகில்
அவதாரம் செய்த சீமான்
ஜீவகாருண்யமே சித்தமதில் கைகொண்ட
தெய்வீகமான பூமான்

ஷை அநுபல்லவி எடுப்பு.

ஐயா—கதருடைதனை யுடுப்பீரே இனி
காந்திசொற் படிநடப்பீரே பூவில்
சதமுடனே தியாகராஜனின் மொழிதனை
சந்ததம் படிப்பீரே—வெகு சா



PANDIT MOTILAL NEHRU

ஸ்ரீமான்

# பண்டித மோதிலால் நேரு பேரில்

கற்பிற்சிறந்த எந்தன் கனியே என்ற மெட்டு

இராகம் காபி தாளம்-ஆதி.

பல்லவி.

பாரத தேவி யுபவாசன்
மந்தகாசன் இந்துநேசன் பிரகாசன் பா

அநுபல்லவி.

தீரமிகுந்திலகும் தியங்கா கெம்பீரன்
ஸ்ரீமான் பண்டிதமோதி லால்வெகுதீரன்
பாரபக்ஷமிலாது பேசுமொய்யாரன்
பார்புகழ் பிரசங்க உதாரன்
சிங்காரன் அலங்காரன் குபேரன் பா

இந்தியா செழித்திட இணக்கம் செய்தாரே
எங்கிலுங் கதருடை தரிக்கச் செய்தாரே
சந்ததம் காந்திசொல் கனைவகித்தாரே
தத்துவமுறை கைகொண்டாரே
என்னசீரே புகழ்பேரே பூண்டாரே பா
சாத்மீக போராட்டம் தடமெங்கும்தானே
சாந்தமாய் புரிந்ததோர் தருமசீமானே
மாத்தரியாத செழும் பசும்பொன் கோமானே
மாயாவதாரணிவர் தானே
எங்கும்கோனே புகழ்தேனே பூமானே பா
பஞ்சாயம் கூட்டும் பிரசங்கமே நேர்த்தி
பண்டிதமோதிலாலின் பெயர்வெகு கீர்த்தி
செஞ்சொல் மொழிதியாக ராஜனின் கீர்த்தி
ஜெகம் புகழ்ந்திடுமமனப் பூர்த்தி
அருள்கார்த்தி கேயன்சீர்த்தி வெகுநேர்த்தி பா



LALA LAJAPAT RAI.

# ஸ்ரீமான் லாலா லஜபதிராய் பேரில்

## கருந்தாகாருண்யனே என்ற இந்துஸ்தான் மெட்டு.

### இராகம்-இந்துஸ்தான்-காபி, தாளம்-ஆதி.

கண்ணி.

லாலா லஜபதியே நாளும் புகழ்நிதியே
நாலா மறைவிதியே மகிழ் அதிபதியே லா

கஜல்.

வாலாயமாகப்ரசங்கம் வழங்கும் குணதீரனே
தாளாமலித்தேசமதில் தானுழைத்த மாரனே

கண்ணி.

மன திடகாத்திரன் மக்கள் ஜெயசூஸ்திரன் லா

கஜல்.

வினயமாய் பாஞ்சாலநாட்டில் விஜயஞான கண்யனே
கனமுடன் காங்கிரஸ்சபையில் கருதிவாய்ந்த புண்யனே

கண்ணி

சென்றாய் சிறைவாசம் சாந்த மொழிபேசும் லா

கஜல்.

நன்மையுற இந்தியர்கள் நாட்டமுடனேகினாய்
மன்னவா காந்திமொழிக்கு மனப்பிரியமாகினாய்

கண்ணி.

சுய ஆட்சிபெற சந்தோஷமுற லா

கஜல்

நயமுடன் தேசீயக்கொடி நாட்டி பெயர்பெற்றவா
பயமின்றி சுதேசிகட்கு பாதுகாப்பை யுற்றவா

கண்ணி.

தேசம் புகழ் சிங்கம் தேசிய தங்கம் லா

கஜல்.

ஈசன்முதல் ஈசன்வரை நேசனாக என்னுவார்
ஆசையாய் திக்கற்றசிறுவர்க் கருங்கல்வி புண்டு பண்ணுவார்

கண்ணி,

சாஸ்திர மறிந்தோன் சகல முந் தெரிந்தோன் லா

கஜல்.

வாய்திறந் தவர் புகழை வழுத்தவென்று லாகுமோ
நேர்த்தியாய் தியாகராஜனின் நற்றமிழ்த்தேன் போகுமோ

கண்ணி.

வந்தே மாதரமே வரும் சுதந்தரமே லா

ஸ்ரீமான் சித்தரஞ்சனதாஸ் என வழங்கும்

# சி. ஆர். தாஸ் பேரில்

வேலனே இந்த வீணனை ஏன் படைத்தாய்

என்ற மெட்டு.

பல்லவி.

கடவுளே காங்கிரஸ் திலகத்தை ஏன் வதைத்தாய்—பெருங்
கதியோ புகழ் நிதியோ தலைவிதியோ உந்தன் சதியோ இது

அநுபல்லவி.

தடமதிலேயவர் தத்துவத்தைவிட்டு
தானாக தன் வாணாளை வீணாகவே காணாமலே க

சரணங்கள்.

தேசிய பக்திக்கோர் திலகலாவண்ணியன்
தேசமெல்லாம் புகழ்ந் தேற்றிடும் புண்ணியன்
பேசிப்ர சங்கத்யாகப் போராடும் கண்ணியன்
பெரியோர்களும் பரிவாக இத்தரைமீதினில் மகிழ்ந்தாற்றிடும்
காந்தியருள்பெற்ற கண்யமிகும் நேசன்
கருத்துள்ளவங்காள பதிக்குப் பிரகாசன்
சாந்தகுணமுள்ள சற்ஜனர் சகவாசன்
சங்கமெங்கும் தங்குமிளஞ் சிங்கமாய் விளங்கும் திவ்ய தி
ஒத்துழையாத தருமமீடேர
ஓங்கும்சுயாக்ஷி யருள்பெற்றுதேர
சித்தரஞ்சன தாசர்களிகூர
சீர் சிறப் பேர்பெருகும் நாகபுரி மாசபையின் தி
மோகனதாஸ்சுத னாகவே பிறந்தார்
மிக்க கல்விகற்று மேன்மையாயிருந்தார்
சோகமுறயாரும் தன்னுயிர் துறந்தார்
ஜோபிதமாய் தியாகராஜன் ஓதிய சங்கீதகுண தி



V. J. PATEL.

# வி. ஜே. பட்டேல் பேரில்

ஆலவாய் மதுராபுரி என்ற மெட்டு

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

எங்கும் புகழ் வி. ஜே. பட்டேலெனும்
இங்கிர்த குண சிங்கமே
இங்கிர்த குண சிங்கமே பூவில் எதிரில்லாபெரும் தங்கமே எ

மகாத்மா காந்தி மறியல் பாட்டு 1, 2 3, 4 பாகம் அவசியம் பார்க்கவும்

தொகையறு.

சங்கமெங்கிலும் தேர்ந்து சாதுர்ய கல்வியை
சமர்த்துடனறிந்த தீரன்
பங்கமில்லாத நல் பாது காப்பெனும் அருளின்
பாக்யம் கொண்ட கெம்பீரன்

ஷை கண்ணி எடுப்பு.

தேசக்ஷேமம தாகவே—பெருந்
தொல்லைகள் பறந்தேகவே
தொல்லைகள் பறந்தேகவே செய்தார் வல்லவர் தான் முன்பாகவே

தொகையறு.

மோசஞ் செய் சூதுமது பானமுடன் முதலியதை
மீட்டி யோட்டியதோர் நேசன்
ஆசையுற்றே ஏழை மக்களை படிப்பித்து
அனுக்கிரகம் செய்த தாசன்

ஷை கண்ணி எடுப்பு.

காந்திசொல்லை மறுத்திடார்—தேச
சுதருடைதனை விடுத்திடார்
சுதருடைதனை விடுத்திடார் பொல்லா சாதகங்கள் தொடுத்திடார்

தொகையறு.

சாந்தமே சதாகாலம் சதமென அறிந்து சுய
ஆட்சியே பெருகும் நண்பர்
பூந்திபோலினித்திடும புகழ் தியாகராஜன் கவி
புகழுதையறிந்த இன்பர்

---

ஆண் பெண் மர்ம இரகசியங்கள் விலை ரூபா 1 0 0

## இந்நூலின் பதிப்பாசிரியர்
## சென்னை ஸ்ரீமான் வி. ஆர். ஏழுமலைப்பிள்ளை
## அவர்கள் பேரில் பாடிய வாழ்த்து.

பாரினிலே புகழ் பாரதபுத்திரரே என்றமெட்டு.

கண்ணிகள்

என்னகரும் புகழ் — சென்னை நகர்வாசன் வி. ஆர்.
ஏழுமலைத் — தாஸன்
உன்னதமாய் பெயர் — ஊரில் விளங்கிடும்
புண்ணியவான் கீர்த்தி — பூவில் துலங்கிடும் — எ

தொகையறு.

தன்மானம் பிரர்மானமென்றெண்ணி ஏழைகளை
தற்காக்கும் புண்ய சீலன்
பொன் பொருள் பலபேர்க்கு புகழுடனுதவிய
பொக்கிஷனும் சுசீலன்

ஷை கண்ணித்தொடர்

பற்பல நூல்களை — அற்புதமாய் பதித்து
பலபேர்க்கு — அளித்து
விற்பனர் போற்ற — விவேகிகள் ஏற்றிட
சொற்குற்றமின்றி — பதிப்புகள் தூற்றிட — எ

தொகையறு.

கற்பனையாய் மனங்களித்து வால்டாக்ஸ் ரோட்டில்
கருத்தாய் புக்ஷாப் வைத்து
எப்போதும் சோங்காமல் வியாபாரம் செய்துமே
எதிராற்று பொருளைச் சேர்த்து

---

இதில் குறிப்பிட்டுள்ள புத்தகங்கள் புத்தக கடைகளில் கிடைக்காவிடில் கீழ் கண்ட விலாசத்திற் கெழுதவும்.

---

எமது விலாசம்:—V. R. ஏழுமலைப் பிள்ளை,

189, வால்டாக்ஸ் ரோட், சௌகார்பேட்டை, மதராஸ்.

ஷை கண்ணித்தொடர்

தானதர்மம் செய்ய தாரணியில் உதித்தார்
தங்கம்போல் பிரகாசித்தார்
வேணதனம் படைத்தே விளங்கும் சீமான்
வேண்டிக் கடவுளை போற்றிசெய்யும் பூமான் எ

தொகையறு.

நலமுற தேசமது நற்சுயராஜ்யகக்ஷி
தன்னிலே சேர்ந்த சீலன்
பலபல புத்தகம் பதிப்பித்து ஜெகமெலாம்
பரவிடச் செய்த சுசீலன்.

ஷை கண்ணித் தொடர்.

புலவர் முதல்யாரும் புகழும் விசுவாசன்
புவியில் பிரகாசன்
தலமீது வி ஏ. தியாகராஜனின் நேசன்
தன்னுயிற் போலவே எண்ணும் பேருல்லாசன் ஏ

---

தேச பக்தர்களின் புகழை தேன் போலினிக்கச் செய்யும்
காங்கிரஸ் பாட்டு முதற்பாகம் முற்றிற்று

---

இதன்தொடர்ச்சி 2, 3, 4, பாகங்கள் அவசியம் பார்க்கவும்

இப்புத்தகமும் இன்னுமதி நூதன அரைபாரம்1-பாரம் சிந்து, கும்மி, விருத்தம், நாடகம், டிராமா, வைத்தியம், ஜோதிடம், மாந்திரீகம், ஜாலம் இன்னும் தங்களுக்கு எந்த புத்தகம் வேண்டுமானாலும் நேரிலும் வி. பி. மூலியமாயும் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு விலைசரசமாய் கொடுக்கப்படும்.

---

எமது விலாசம்:—V. R. ஏழுமலைப்பிள்ளை,
189, வால்டாக்ஸ் ரோட், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

மனோரஞ்சினி பிரஸ், சௌகார்பேட்டை, சென்னை.

## (ஜிகியூர்) வெள்ளை எனும் கள்ளநோய்க்குமருந்து

### இதன் குணத்தை மூன்று தினத்தில் காணலாம்

மலமாதரிடத்தும் வேசியரிடத்தும் பிணியாளரோடும் சம்பந்தப் படுவதினாலும், ஓயாத சிற்றின்ப;வனுபோகத்தாலும் மூலத்தில் அக்கினி கொண்டு தாதுகெட்டு பிரமியங்கள் நீரடைப்பு சதையடைப்பு வெள்ளைவெட்டை கிரந்தி, சூலை,அரையாப்பு பவுத்திர முதலியவைகள் உண்டாகின்றன அவைகளில் முக்கியமாகிய இரத்தப்பிரமியம் நீர்கடுப்பு, நீர்தாரை யெரிவு, வெள்ளை. வெட்டை இவைகளுக்கு இதுவே மிகவும் அனுபோகமானமருந்து என்பது உண்மை பேதி முதலிய கெட்ட குணங்கள் இதற்கு கிடையாது பத்தியமில்லை உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 2.

## சர்வபடை சங்காரன்

இதுசரீரத்திலும் இடுக்கானவிடங்களாகிய அக்குள் தொடையின் இடுக்கு வஸ்திரம் கட்டுமிடமாகிய இடுப்பிலும் இடுப்பைச்சுற்றிலும் உறுகஜனித்துவரவா விசேஷமாய்படர்ந்து ஓயாத அதிகநமைச்சலைக் கொடுத்து நித்திரையை பங்கப்படுத்தி கஷ்டத்தை உண்டுபண்ணும் படியான சாதாரணமேகப்படை,மேகக்காரிகப்படை தடிப்புப்படையென்னும் தென்தேசங்களில் வண்டுக்கடி என வழங்கும் கொடிய வியாதிகளையும் சொரிசிரங்கு தேமல் முதலிய இதர கர்மவியாதிகளையும் போக்கி மனதைக்களிக்கச் செய்யக்கூடிய அதிக அற்புத சுகந்த வாசனை யுள்ளது 8 நாளைக்குள் மேற்கண்ட வியாதிகளை கண்டிக்கக் கூடியது. பத்தியமில்லாத மருந்து இதைமேலுக்கு மாத்திரம் உபயோகிக்கவேண்டியது.

| | |
|---|---|
| 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு | 0 10 0 |
| 3-புட்டி விலை | 1 0 0 |

## சர்வதேள் விஷ நிவாரணி சஞ்சீவி

நண்பர்களே ஒவ்வொருவர் வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொருக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும்பார்த்து விசனமுற நேருவதைப் பற்றியாம், அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டுபிடித்து இருக்கிறோம். தேள் நட்டுவாக்காலி கொட்டியவுடனே இந்த மருந்தை போட்டால் 1, 2 நிமிஷங்களில் கட்டாயம் விஷம் நீங்கும்.

இதன் உபயோக விவரம் மருந்தோடு அனுப்பப்படும்.

இதன் விலை பாக்கெட் அணா 8

---

எமது விலாசம்:— V. R. ஏழுமலைப் பிள்ளை,

[illegible]89, வால்டாக்ஸ் ரோட், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

## எலக்ட்ரிக் பௌண்டன் பேனா.

இந்த பேனாவில் பாட்ரி வைத்திருப்பதால் இதற்கு இராக்காலங்களில் எழுத வேணுமென்றால் விளக்குத் தேவையில்லை பட்டனை அழுத்திவிட்டால் பேனாவிலுள்ள பல்ப் எரிந்துக்கொண்டே இருக்கும் ஒரு அரை முழுவதும் வெளிச்சமாகவே இருக்கும்.

விலை ரூபா 2 4 0

## பாக்கெட் சிகார் லைட்.

சுருட்டு, சிகரெட், பீடி முதலியவைகளை உபயோகிப்பவர்களுக்கு வெகு அனுகூலமானது தீப்பெட்டி இருக்க வேண்டியதவசிய மில்லை இதை எரியவைப்பதற்கு திரி முதலியது தேவையில்லை இதன் மேற்புரம் இருக்கும் சக்கரத்தை திருப்பினால் எரியும் இந்த லைட்டுக்கு பின்புரத்தில் கொஞ்சம் பெட்ரோல் எண்ணை விட்டால் போதும். இதன் விலை ரூபா 1 12 0

## புதிய பட்டுகுட்டைகள்.

$5\frac{1}{2}$ முழநீளம் $2\frac{1}{2}$ முழ அகலமுள்ளது இதைவாங்கி தரித்துக்கொண்டு பெரிய அரண்மனை ஆபீஸ். ஆலயம், கலியாணம் முதலிய இடங்களுக்கு போவதற்கு வெகு மேன்மையுள்ளதாகவும் டம்பமாகவும் மதிப்புடனும் இருக்கும் இந்த குட்டை ஒருமுறைவாங்கி அணிந்துக் கொள்பவர்களுக்குதான் இதினருமை நன்கு விளங்கும்.

குட்டை ஒன்றுக்கு ரூபா 2 8 0

இவைகளில் பச்சை, வெள்ளை, சிகப்பு, வெண்சிகப்பு, ரோஸ் ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலிய பலரகங்கள் உண்டு. வேண்டுவோர் இன்னகுட்டை வேண்டுமென விபரமாக எழுதவும்.

☞ முக்கிய கவனிப்பு:—வி. பி போஸ்டில் சாமான்களை அனுப்பும்படி கட்டளை செய்யும ஒவ்வொருவரும் தாங்கள் எழுதும் கடிதங்களில் எழுத்துகள் நன்றாய் தெரியும்படி எழுதுவதுடன் ஒவ்வொரு கடிதத்திலும் தங்கள் முழுவிலாசம் விபரமாய் எழுதவேண்டும் அப்படி விபரமாய் எழுதாத கடிதங்களுக்கு சாமான்கள் அனுப்பமுடியாது. பதில் வேண்டுவோர் ரிப்ளைகார்டு எழுதவும்.

எமது விலாசம்:—V·R. ஏழுமலைப் பிள்ளை,

189, வால்டாக்ஸ் ரோட், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

ஏமாறவேண்டாம்! இனி ஏமாறவேண்டாம்

ஏன்?

வி. ஆர். ஏழுமலைப்பிள்ளையவர்களால் பதிப்பித்தது.

உண்மையான விஷயங்களுடன் பழையக்கொக்கோகம்
வெளிவந்து விட்டபடியால், இனி ஏமாறவேண்டாம்!

# அமுர்தநிலை சக்கரங்கூடிய

பழைய

# கொக்கோகம்.

மூலமும் உரையும்

இவ்வறிய நூலின்கண் சதிபதிகளின் அவயலக்ஷணங்களும் மர்ம ஸ்தானங்களின் அமைப்பும் காமவுற்பவம் சம்போகத்தின் விளக்கம் மாதவிடாயின் தத்துவம் இன்ப காலத்தில் நிகழுவதென்ன? இன்ப மனுபவிக்கும்முறை சம்போகக்கிரமம் மர்ம ஸ்தானங்களின் பேதாபேதம் மாதர்களுக்கு அமிர்தமிருக்குமிடமும் ஸ்தானத்திற்குறிய தொழில் கலவியில் கொக்கோக லீலை ஆண்மலடும், பரிகாரமும், பெண்மலடும் பரிகாரமும் மனம்போல் மக்களைப்பெரும் பாக்யம், ஸ்திரிகள் புருஷர்களை வஷியப்படுத்தும்முறையும் புருஷர்கள்பெண்களை வஷியப்படுத்தும் முறையும் பள்ளியறையின் நிகழ்ச்சி, இதுபோல் இன்னும் நூற்றுக்கணக்கான விஷயங்கள் அடங்கியிருக்கிறது. இந்நூலை வாலிபர் முதல் வயோதிகர் வரையில் ஆண் பெண் இருபாலரும் அவஷியம் வாங்கி வாசிக்கவேண்டியது சுமார் 5 வருடகாலமாக வெகு கஷ்டப்பட்டு தயார் செய்யப்பட்டது சொற்ப காபிகளே கையிலிருப்பதால் முந்தின வருக்குத்தான் புஸ்தகம். அநேக அழகிய கொக்கோக லீலா விநோத ரகசியப் படங்களுடன் சொற்ப விலை ரூ. 2 0 0

நீங்கள் சதா சிறிப்பையும் சந்தோஷத்தையும்
அடைய வேண்டுமானால்?

அண்டப்புளுகனை அகட்டி, ஆகாயப்புளுகனை மிரட்டி, திடீர்புளுகனை துரத்தி, ஜண்டப்புளுகன் வண்டிப்புளுகன் மதருஸ் புளுகன், முதலிய பிரபல புளுகர்களை ஜெயித்து புளுகர்களுக்கு அரசனாக விளங்கிய நிமிஷப்புளுகனை வென்ற,

## நிஜப்புளுகன்.

என்னும் புத்தகத்தை உடனே வாங்கி வாசியுங்கள்.

இதன் விலை அணா, 0—6—0.

---

எமது விலாசம் : V. R. ஏழுமலைப்பிள்ளை,
189, வால்டாக்ஸ்ரோட், சௌகார்பேட்டை போஸ்டு, மதருஸ்.